# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

**பாடம் 5**

## அர்த்தத்தின் சிக்கல்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** ........ **1**

**நேரடி உணர்வு** ........ **2**

- பன்முக அர்த்தங்கள் ........ 3
- ஒற்றை அர்த்தம் ........ 9

**முழு மதிப்பு** ........ **14**

- அசல் அர்த்தம் ........ 15
- வேதாகம விளக்கங்கள் ........ 17
- முறையான செயல்படுத்தல்கள் ........ 23

**முடிவுரை** ........ **27**





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

வேதாகம வியாக்கியானத்தைப் பற்றிய விவாதங்களில் ஒரு பழமொழி அடிக்கடி வருகிறது. ”ஒரு அர்த்தம் இருக்கிறது, ஆனால் அந்த அர்த்தத்திற்கு பல பயன்பாடுகள் உள்ளன” என்பது தான் அது. எடுத்துக்காட்டாக, ”உங்கள் அயலாரை நேசியுங்கள்” என்பது போன்ற எளிய, நேரடியான போதனையை வேதம் நமக்குக் கொடுக்கிறது. ஆனால் நாம் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு அண்டை அயலாரைக் கையாளும்போது இந்த அறிவுறுத்தலை நம் வாழ்க்கையில் பல வழிகளில் பயன்படுத்த வேண்டும்.

இந்த நுண்ணறிவு எவ்வளவு உதவியாக இருந்தாலும், வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும்போது, ஒவ்வொரு வேதப் பகுதியின் அர்த்தமும் சிக்கலானது அல்லது பன்முகத்தன்மை கொண்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ”ஒரு அர்த்தம் ஆனால் பல பயன்பாடுகள் உள்ளன” என்று சொல்வதை விட, ”ஒரு அர்த்தம் இருக்கிறது, ஆனால், அந்த ஒரு அர்த்தத்தின் பல பகுதி சுருக்கங்கள் உள்ளன. மேலும் அதற்கு பல பயன்பாடுகள் உள்ளன.” என்று சொல்வது மிகவும் உதவியாக இருக்கும். ஒவ்வொரு வேதப் பகுதியின் ஒரு அர்த்தம் மிகவும் சிக்கலானது, ஆகையால் பல வழிகளில் எவ்வாறு சுருக்குவது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும், பின்னர் அதை நம் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்: வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்கிற நமது தொடரின் ஐந்தாம் பாடம் ஆகும். இந்த பாடத்திற்கு ”அர்த்தத்தின் சிக்கல்” என்று தலைப்பிட்டுள்ளோம், ஏனென்றால் காலங்காலமாக கிறிஸ்தவர்கள் வேத பகுதிகளுக்கு வெவ்வேறு வகையான அர்த்தங்களையும் பல்வேறு அர்த்தங்களையும் வழங்கிய வழிகளை ஆராய்வோம்.

வேதத்தில் அர்த்தத்தின் சிக்கலான தன்மையைப் பற்றிய நமது விவாதம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலாவதாக, வியாக்கியான அறிஞர்கள் பெரும்பாலும் வேதாகமத்தின் ”நேரடி உணர்வு” என்று எதை அழைக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, பல்வேறு வழிகளில் இலக்கிய அர்த்தத்திற்கு அப்பால் விரிவடைகிற ஒரு வேத பகுதியின் முழு மதிப்பில் கவனம் செலுத்துவோம். வேதாகமத்தின் அதிகாரத்தைக் குறித்து முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நேரடி உணர்வு

சில நேரங்களில் தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள லத்தீன் சொற்றொடரான சென்சஸ் லிட்டலிஸ் என்று அழைக்கப்படும் ”இலக்கிய உணர்வு” என்ற பயன்பாடு நம் காலத்தில் பெரும்பாலும் ”நேரடி வியாக்கியானம்” என்ற பயன்பாட்டுடன் குழப்பத்தை உருவாக்குகிறது. ”நேரடி வியாக்கியானம்” என்பது வேதத்தைப் புரிந்துகொள்வதற்கான மர அல்லது இயந்திர அணுகுமுறைகளைக் குறிக்கிறது. ஆனால் வரலாற்று ரீதியாக, ”நேரடி உணர்வு” என்ற சொல்லாடல் எப்போதும் ஒரு வேத பகுதியின் ”அசல் அர்த்தம்” அல்லது ”இலக்கண-வரலாற்று அர்த்தம்” என்று நவீன சுவிசேஷக சபையார் அழைத்ததைப் போன்ற ஒன்றைக் குறிக்கிறது.

வேதத்தின் சொற்களையும் சொற்றொடர்களையும் ஆசிரியரின் நோக்கங்கள் மற்றும் அவற்றின் அசல் வாசகர்களின் வரலாற்று சூழல்களுக்கு ஏற்ப நேரடி உணர்வு எடுத்துக்கொள்கிறது.

இது வேதாகமத்தில் உள்ள வெவ்வேறு இலக்கிய நடைகளில் கவனம் செலுத்துகிறது. உருவகங்கள், உவமைகள், ஒப்புமைகள் மற்றும் மிகைப்படுத்தல் போன்றவற்றை இது அங்கீகரிக்கிறது. வரலாற்றை வரலாறாகவும், கவிதையை கவிதையாகவும், பழமொழிகளை பழமொழிகளாகவும் இது எடுத்துக்கொள்கிறது.

> வேதாகம புத்தகங்களில் பல்வேறு இலக்கிய நடைகள் உள்ளன, மேலும் அந்த நடைகளில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொள்வது முக்கியம், இதனால் அவற்றைப் புரிந்துகொள்ளவும், அவற்றை பொருத்தமாக வியாக்கியானம் செய்யவும் முடியும். எல்லா இலக்கிய நடைகளும் ஒரே மாதிரியாக ஒரே விஷயத்தைச் செய்யும் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை. எனவே வேதாகம நூல்களின் இலக்கிய நடையைப் புரிந்துகொண்டு கவனம் செலுத்துவதன் மூலம், அந்த புத்தகங்களை நாம் எவ்வாறு வியாக்கியானம் செய்ய வேண்டும் என்பதற்கான திட்டத்தை புத்தகங்களே அமைக்க அனுமதிக்கிறோம்.
>
> – Dr. பிராண்டன் குரொவ்

ஒரு வேதப் பகுதியின் நேரடி உணர்வு ஒரு பக்கத்தில் எழுதப்பட்ட வெறும் வார்த்தைகளை விட அதிகமாக இருப்பதைக் காணும்போது, ஒவ்வொரு வேத பகுதியின் உணர்திறன் எவ்வளவு சிக்கலானது என்பதை நாம் உணரத் தொடங்குகிறோம். எழுத்தாளர்களின் நோக்கங்கள் பன்முகத்தன்மை

கொண்டவை. இலக்கிய நடை பரிசீலனைகள் ஒரு வேத பகுதியின் அர்த்தத்தை சிக்கலாக்குகின்றன. உருவக பேச்சுகளும் பல பரிசீலனைகளை அறிமுகப்படுத்துகின்றன. இந்தக் காரணிகள் ஒவ்வொரு வேதப் பகுதியின் மூலப் அர்த்தத்தின் பன்மடங்கு நுணுக்கங்களை வெளிப்படுத்துகின்றன. பல நேர்மையான கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் அர்த்தத்தை வெவ்வேறு வழிகளில் அணுக இந்த சிக்கல்கள் வழிவகுத்தன.

வரலாறு நெடுகிலும், வேதாகம நூல்களின் உண்மையான அர்த்தத்தை அல்லது மூல அர்த்தத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியத்தை கிறிஸ்தவர்கள் கிட்டத்தட்ட ஒருமனதாக உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் வேதாகமத்தின் அர்த்தம் மிகவும் சிக்கலானது, அதை நேரடி உணர்வு என்ற தலைப்பின் கீழ் போதுமான அளவு சுருக்க முடியாது என்று வாதிடும் பிற குரல்களும் உள்ளன. எனவே, நமது பாடத்தின் இந்த பகுதியில், ”நேரடி உணர்வு” என்ற சொல்லாடலின் வரலாற்றை ஆராய்வோம், சரியாக புரிந்து கொள்ளப்பட்ட நேரடி உணர்வு, வேதாகமத்தின் சிக்கலான அர்த்தத்தை ஆராயவும் விவரிக்கவும் நமக்கு எவ்வாறு உதவும் என்பதைப் பார்ப்போம்.

வேதாகமத்தில் அர்த்தத்தின் சிக்கலான தன்மையானது அதன் நேரடி அர்த்தத்துடன் தொடர்புடைய இரண்டு முக்கிய வழிகளைப் பார்ப்போம். முதலாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்றும் சிலர், உண்மையான உணர்வு என்பது வேதாகமத்தின் பல அர்த்தங்களில் ஒன்று மட்டுமே என்று கூறியுள்ளனர் என்பதைக் காண்போம். இரண்டாவதாக, இலக்கிய உணர்வு என்பது வேதத்தின் ஒற்றை அர்த்தம் என்ற கருத்தில் கவனம் செலுத்துவோம். வேதத்தின் பல அர்த்தங்களில் ஒன்று மட்டுமே நேரடியான உணர்வு என்ற நம்பிக்கையை முதலில் பார்ப்போம்.

## பன்முக அர்த்தங்கள்

ஆரம்பகால திருச்சபையில், வேதாகமம் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது என்ற கருத்து பெரும்பாலும் வியாக்கியான இயல்களின் உருவக அணுகுமுறைகளின் விளைவாகும். வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள வரலாற்று மனிதர்கள், இடங்கள், விஷயங்கள் மற்றும் நிகழ்வுகளை ஆவிக்குரிய உண்மைகளுக்கான சின்னங்கள் அல்லது உருவகங்கள் போல வியாக்கியானம் செய்வது உருவக அணுகுமுறையாகும். ஒரு மரம் ஒரு ராஜ்யத்தைக் குறிக்கலாம், ஒரு போர் பாவத்துடனான உள் போராட்டத்தைக் குறிக்கலாம், மேலும் இது போல பல உள்ளன. உருவக வியாக்கியானங்களில், வேதத்தில் விவரிக்கப்பட்டுள்ள இயற்பியல் உண்மைகள் பெரும்பாலும் குறைத்து மதிப்பிடப்படுகின்றன, மேலும் அவை முக்கியமற்றவை அல்லது பொய்யானவை என்று கூட நிராகரிக்கப்படலாம். இந்த பௌதிக யதார்த்தங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஆவிக்குரிய

கருத்துக்கள் வேதாகமத்தின் மிக முக்கியமான விஷயங்களாகக் கருதப்படுகின்றன.

கி.மு. 20 முதல் கி.பி.50 வரை வாழ்ந்த அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த யூத அறிஞர் பிலோ என்பவரிடமிருந்து கிறிஸ்தவ உருவக அணுகுமுறைகள் சில நேரங்களில் காணப்படுகின்றன. எபிரெய வேதாகமத்தை உயர்ந்த ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்தும் உருவகங்களாகப் பார்ப்பதன் மூலம் பிலோ கிறிஸ்தவ உருவக முறைகளுக்கு அடித்தளமிட்டார்.

பிலோவுக்குப் பிறகு, திருச்சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில், முன்னணி கிறிஸ்தவ அறிஞர்கள் வேதாகமத்தின் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு இரண்டையும் வியாக்கியானம் செய்வதில் இதேபோன்ற அணுகுமுறையை மேற்கொண்டனர். இது குறிப்பாக அலெக்சாண்டிரியாவின் இறையியல் பள்ளியில் உண்மையாக இருந்தது, இது இறையியல் மாணவர்களுக்கு இறையியலையும் வேதத்தின் வியாக்கியானத்தையும் கற்பித்தது.

கி.பி.185 முதல் கி.பி.254 வரை வாழ்ந்த ஒரிகன் என்பவர் இறையியல் பள்ளியில் மிகவும் பிரபலமான ஆசிரியர்களில் ஒருவர். வேதாகமத்தின் அர்த்தத்தை ஒரிகன் நேரடி உணர்வு மற்றும் ஆவிக்குரிய உணர்வு என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். 2 கொரிந்தியர் 3:6-ல் உள்ள எழுத்தின் பிரமாணத்திற்கும் ஆவியின் பிரமாணத்திற்கும் இடையிலான பவுலின் வேறுபாட்டிலிருந்து, வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் இரண்டு முக்கிய வகையான அர்த்தங்களைக் கொண்டுள்ளது என்று ஒரிகன் கூறினார்: அவையாவன; வேத பகுதியின் எழுத்து மற்றும் வேத பகுதியின் ஆவி. ”எழுத்து” என்பதன் மூலம், ஒரிகன் சொற்களின் இலக்கணச் சூழலில் உள்ள எளிய அர்த்தத்தைக் குறித்தார். ஒரு வேத பகுதியின் ”ஆவி” என்பதன் மூலம், அவர் உருவக புலன்களைக் குறிக்கிறார் - ஆதாது சொற்களின் வெளிப்படையான அர்த்தத்திற்கு அப்பாற்பட்ட அர்த்தங்களைக் குறித்தார். ஒரிகன் வேதப் பகுதியின் எழுத்தை அதன் நேரடி அர்த்தத்துடன் சமப்படுத்த முனைந்தார், மேலும் அவர் நேரடி அர்த்தத்தின் அதிகாரத்தை ஆதரித்தார். ஆனால் இது தவிர, முதிர்ச்சியடைந்த, ஆவிக்குரிய விசுவாசிகள் வேதத்தின் ஆவிக்குரிய உணர்வைக் கண்டுபிடிக்க உண்மையான அர்த்தத்திற்கு அப்பால் பார்க்க வேண்டும் என்று ஒரிகன் வாதிட்டார்.

எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 1 மற்றும் 2 இல் உள்ள படைப்புக் கதைகள் பகுத்தறிவுக்கு முரணானவை என்றும், எனவே கிறிஸ்தவர்கள் தங்கள் உண்மையான உணர்வைப் புறக்கணித்து ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்களைத் தேட வேண்டும் என்றும் ஒரிகன் தனது *ஃபர்ஸ்ட் பிரின்சிபிள்ஸ்* என்ற நூலில், புத்தகம் 4, அத்தியாயம் 1, பிரிவு 16 இல் வாதிட்டார். ஒரிகனின் உருவக முறைகள் வரலாறு முழுவதும் பல முறை விமர்சிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவரது அணுகுமுறையானது ஆரம்பகால

கிறிஸ்தவ மரபுவழியின் திசையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்தது.

> ஜான் கிரிசோஸ்டோம் போன்ற சில பண்டைய வியாக்கியான அறிஞர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் போன்ற வேதாகம விவரிப்புகள் குறித்து சில அற்புதமான நுண்ணறிவுகளைக் கொண்டிருந்தனர், மேலும் அவர் அவற்றை இன்னும் நேரடியாகப் படிக்க முனைந்தார். நாம் பொதுவாக கதைகளைப் படிப்பது போலவே, கதை என்ன சொல்கிறது என்பதைக் கேட்கவும், மேலும் கதையிலிருந்து பாடங்களை அல்லது ஒழுக்கங்களைப் பெறவும் முயற்சிக்கிறோம். ஒரிகன் போன்ற பிற வியாக்கியான அறிஞர்கள் உருவகப்படுத்தவும், அவற்றை ஒரு தொடர் சின்னங்களாக மாற்றவும் முனைந்தனர், வேதம் உண்மையில் அந்த வழியில் புரிந்துகொள்வதற்காக எழுதப்பட்டதல்ல என்பது தான் அந்த முறையின் ஆபத்தாகும். பழைய கட்டுக்கதைகளையும், பழைய கட்டுக்கதைகளில் உள்ள சங்கடமான விஷயங்களையும் வியாக்கியானம் செய்ய முயன்ற கிரேக்க மெய்யியலாளர்களிடமிருந்து இந்த முறை உண்மையில் பெறப்பட்டதாக நீங்கள் கருதுகிறீர்கள். வேத பகுதி என்ன சொல்கிறது என்பதை அவர்கள் இப்போது கேட்க முயற்சிக்கவில்லை. வேறு எதையாவது ஒரு வகையில் உட்புகுத்துவதன் மூலம் அதை மேலும் உத்வேகப்படுத்த முயற்சிக்கின்றனர். அதே நேரத்தில், ஒரிகன் கூட சில நேரங்களில் சில நல்ல நுண்ணறிவுகளைக் கொண்டிருக்கிறார்.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்

வேத வியாக்கியானத்திற்கான ஆவிக்குரிய அல்லது உருவக அணுகுமுறைகளில் ஒரிகனின் போக்கு ஆரம்பகால திருச்சபையில் நியோ-பிளேட்டோனிசத்தின் தாக்கத்தை பிரதிபலித்தது. வேதவாக்கியங்கள் தூய தேவ ஆவியான தேவனிடமிருந்து வந்தன என்பதை இந்தக் கண்ணோட்டம் கூறுகிறது. இதன் விளைவாக, வேதாகமம் உண்மையில் பௌதிக உலகத்தைப் பற்றி கற்பிக்கவில்லை என்று கருதப்பட்டது. பொருள் இயல்பிலேயே தீமையானது. எனவே, வேதவசனங்கள் வரலாற்றில் நடந்த பௌதீக விஷயங்களைக் குறிப்பிடும்போது, அவை உண்மையில் உருவகங்களால் புரிந்துகொள்ளக்கூடிய பரலோக, ஆவிக்குரிய சத்தியங்களை சுட்டிக்காட்டின.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த கண்ணோட்டத்தில், வேதாகமத்தின் உண்மையான அர்த்தமானது இந்த பெரிய ஆவிக்குரிய சத்தியங்களில் இருந்தது, மேலும் இந்த சத்தியங்களை பகுத்தறிவது வேதாகம வியாக்கியானத்தின் மிக உயர்ந்த குறிக்கோளாக இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவ இறையியலாளர்கள் இந்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் அதைச் செய்தபோது, பௌதிக உலகத்தைப் பற்றிய வேதத்தின் விபரங்களில் அவர்கள் கடுமையான சிக்கல்களை எதிர்கொண்டனர். பிரபஞ்சத்தின் உருவாக்கம், தேவனுடைய மக்களின் வாழ்க்கையில் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள், எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலின் மீட்பு, மற்றும் வாக்குத்தத்த தேசத்தில் தேவனுடைய மக்களுக்காக ஒரு பூலோக ராஜ்யத்தை நிறுவுதல் போன்ற விஷயங்களில் பழைய ஏற்பாடு கவனம் செலுத்துகிறது. புதிய ஏற்பாடு இயேசுவின் வாழ்க்கையிலும் அப்போஸ்தலர்களின் வாழ்க்கையிலும் நடந்த இயற்பியல் நிகழ்வுகளில் கவனம் செலுத்துகிறது. நியோ-பிளேட்டோனிசத்தால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, இந்த வரலாறுகளின் இயற்பியல் அம்சங்கள் சிக்கலானவை, ஏனெனில் அவை பௌதிக உலகத்தை தேவனுடைய நல்ல படைப்பாக சித்தரித்தன. எனவே, வேதத்தையும் நியோ-பிளேட்டோனிய தத்துவத்தையும் சமரசம் செய்வதற்கான ஒரு வழிமுறையாக உருவக வியாக்கியானப் பள்ளிகளிடம் அவர்கள் முறையிட்டனர். அவர்களுடைய மரபுவழி அணுகுமுறைகள் வேதத்தில் பதிவு செய்யப்பட்ட பௌதீக உண்மைகளை குறைத்து மதிப்பிட்டன, மேலும் கிறிஸ்தவர்கள் தாங்கள் கற்பிக்க உத்தேசித்துள்ள ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களைத் தேட ஊக்குவித்தனர்.

வேதாகமத்தின் ஆவிக்குரிய உணர்வு பல்வேறு வழிகளில் ஆராயப்பட்டு வகைப்படுத்தப்பட்டது. ஒரு செல்வாக்குமிக்க அணுகுமுறை *குவாட்ரிகா* என்று அழைக்கப்பட்டது. இது நான்கு குதிரைகளால் இழுக்கப்பட்ட ரோம ரதத்தைக் குறிக்கும் லத்தீன் சொல்லாகும். வேதாகமம் நான்கு வேறுபட்ட அர்த்தங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதைக் குறிக்க ஒரு நாற்கரத்தின் உருவம் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டது.

கி.பி. 360 முதல் 435 வரை வாழ்ந்த ஜான் காசியன், இந்த அணுகுமுறையை தனது படைப்பான கான்பரன்ஸஸ், பகுதி 14, அத்தியாயம் 8 இல் சற்று விரிவாக விவரித்தார். நேரடியான மற்றும் ஆவிக்குரிய புலன்களுக்கு இடையிலான ஒரிகனின் அடிப்படை வேறுபாட்டை காசியன் பின்பற்றினார். ஆனால் அவர் பின்வரும் மூன்று வகையான ஆவிக்குரிய அர்த்தங்களை அடையாளம் காண்பதன் மூலம் இதையும் தாண்டிச் சென்றார்; அவையாவன: ஒரு வேத பகுதியின் கோட்பாட்டு போதனையான உருவக உணர்வு; ஒரு வேத பகுதியின் தார்மீக போதனையாக இருந்த தார்மீக உணர்வு;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் பரலோகம் மற்றும் கடைசி கால இரட்சிப்பைப் பற்றிய வேத பகுதியின் போதனையாக இருந்த மறை உட்பொருள் உணர்வு.

எடுத்துக்காட்டாக, *குவாட்ரிகாவின்* கூற்றுப்படி, ஒரு வேதப் பகுதி "எருசலேம்" என்று குறிப்பிடும்போது, அது நான்கு வழிகளில் புரிந்துகொள்ளப்படலாம். அதன் நேரடி அர்த்தத்தில் இது இஸ்ரேலின் பண்டைய தலைநகரம் ஆகும். அதன் உருவக அர்த்தத்தில், இது திருச்சபையின் கிறிஸ்தவ கோட்பாட்டைக் குறிக்கிறது. அதன் பண்பாட்டு அர்த்தத்தில், எருசலேம் ஒரு விசுவாசமான விசுவாசியையோ அல்லது மனித ஆத்துமாவின் தார்மீக குணங்களாகவோ குறிக்கலாம். அதன் மறை உட்பொருள் அர்த்தத்தில், அது வெளிப்படுத்துதல் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பரலோக நகரமாக இருக்கலாம்.

பல நூற்றாண்டுகளாக வேதாகம வியாக்கியான அறிஞர்கள் ஒரு வேதாகம பகுதியின் ஆவிக்குரிய அர்த்தங்களை அதன் நேரடி அர்த்தத்துடன் எவ்வளவு நெருக்கமாக பிணைக்க வேண்டும் என்று விவாதித்தனர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். எல்லா அர்த்தங்களும் நேரடியான அர்த்தத்துடன் இணைந்திருக்கின்றன என்று சிலர் வாதிட்டனர், ஆனால் மற்றவர்கள் வேத பகுதியின் ஒவ்வொரு உணர்வும் மற்றவற்றிலிருந்து சுயாதீனமானது என்று கூறினர். மேலும் அவர்கள் மறைக்கப்பட்ட ஆவிக்குரிய அர்த்தங்களை ஈர்த்தனர், அவைகளுக்கு நேரடி அர்த்தத்துடன் எந்த தொடர்பும் இல்லை.

ஒரு எடுத்துக்காட்டாக, 1090 முதல் 1153 வரை வாழ்ந்த கிளேர்வாக்ஸின் செல்வாக்குமிக்க பிரெஞ்சு இறையியலாளர் பெர்னார்ட், வேதாகமத்தின் சில மிகவும் கற்பனையான வியாக்கியானங்களை ஊக்குவித்தார், இது அதன் ஆவிக்குரிய புலன்களை அதன் உண்மையான அர்த்தத்திலிருந்து பிரித்தது. எடுத்துக்காட்டாக, சாலொமோனின் உன்னதப்பாட்டைப் பற்றிய அவரது வியாக்கியானம் வேத பகுதியின் நேரடி அர்த்தத்துடன் முற்றிலும் தொடர்பில்லாதது.

சாலொமோனின் உன்னதப்பாட்டிலுள்ள 1:17 இல் இருந்து இந்த வார்த்தைகளை கவனிக்கவும்:

> நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுருமரம், நம்முடைய மச்சு தேவதாருமரம் (உன்னதப்பாட்டு 1:17).

இந்தப் பகுதியை அதன் வரலாற்றுப் பின்னணியில் படிக்கும்போது, அது சாலொமோனின் உண்மையான அரண்மனையைப் பற்றிய விளக்கமாக இருப்பதைக் காண்பது கடினம் அல்ல. அது ராஜாவின் ராஜ குடியிருப்பின் அதிசயத்திற்கு கவனத்தை ஈர்த்து அவரை உயர்த்தியது.

ஆனால் க்ளெய்ர்வாக்ஸின் பெர்னார்ட் இந்த வசனத்தின் நேரடியான, இலக்கண-வரலாற்று அர்த்தமானது தனது வியாக்கியானத்தை நிர்வகிக்க அனுமதிக்கவில்லை. அவரது பார்வையில், இந்த வேத பகுதி உண்மையில் ஆவிக்குரிய யதார்த்தங்களை அடையாளப்படுத்துகிறது. அந்த வீடே தேவனுடைய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும் வீட்டின் தூண்கள் மற்றும் அரண்கள் சபை அதிகாரங்களுடன் ஒத்திருந்தன. திருச்சபையும் அரசும் எவ்வாறு ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட வேண்டும் என்பதை இந்த வசனம் கற்பித்தது என்று அவர் மேலும் கூறினார். இந்த வேத பகுதியில் பெர்னார்ட் கண்ட ஆவிக்குரிய அர்த்தங்கள் அதன் நேரடி அர்த்தத்திலிருந்து வெளிப்படவில்லை, அல்லது ஒருங்கிணைக்கப்படவில்லை.

> உருவகத்தின் மூலம் நான் ஆசிரியரின் நோக்கம் கொண்ட உருவகத்தை அல்ல, ஆனால் ஒரு வேத பகுதியை எடுத்து அதை ஆசிரியர் விரும்பாத வகையில் உருவகப்படுத்துகிறேன் என்று மார்ட்டின் லூதர், ஆதியாகமம் பற்றிய தனது விரிவுரைகளில், இந்த உருவக வியாக்கியான பாணியைப் பற்றி பேசுகிறார். தனது இளமைப் பருவத்தில், லூதர், நான் இதில் மிகவும் நன்றாக இருந்தேன் என்று கூறுகிறார், அதற்காக நான் நிறைய கைதட்டல்களைப் பெற்றேன் என்கிறார். ஆனால் இது வேதத்தை உண்மையாக வியாக்கியானப்படுத்துவதாக இருக்காது. கால்வின் இந்த உருவகத்தைப் பற்றி பேசுகிறார், இது வேதத்தின் மீது இணக்கமாக இருப்**பது** போன்றது, நீங்கள் எழுத்தாளருக்கு விசுவாசமாக இருப்பதைக் காட்டிலும் வியாக்கியான அறிஞர் விரும்பும் வழியில் திருப்பலாம் என்று கூறுகிறார்... இருப்பினும், திருச்சபை பிதாக்களைப் படிப்பதில் மதிப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன், லூதர் அவர்களை விமர்சித்தாலும் கூட அவர்களின் எழுத்துக்களைப் படித்தார். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம், அவர்கள் பெரும்பாலும் உண்மையான கோட்பாடுகளை சட்டவிரோதமாக எடுத்து, அதைச் சொல்லாத வேத பகுதிகளில் திணித்தாலும், அவர்கள் என்ன செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். பழைய ஏற்பாட்டை எவ்வாறு வியாக்கியானம் செய்வது மற்றும் கிறிஸ்தவர்களுக்கு பொருத்தமானதாக மாற்றுவது எப்படி என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் முயன்றனர், நாம் சொல்வது போல, சில நேரங்களில் அதில் தவறாகப் போய்விட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். எனவே அவர்கள் வேதாகமத்தை எவ்வாறு வியாக்கியானம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> செய்தார்கள் என்பதைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளலாம். திருச்சபை வரலாறு முழுவதிலும் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பல நம்பகமான வியாக்கியான எடுத்துக்காட்டுகளும் உள்ளன.
>
> – Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

வேதாகமத்திற்கு பல அர்த்தங்கள் உள்ளன என்ற கருத்து சமகால உலகிலும் பெரும்பாலும் வெவ்வேறு காரணங்களுக்காக பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. வேதாகமத்தை பல நிலைகளில் தொடர்புகொள்வதற்காக தேவன் வடிவமைத்தார் என்று வாதிடுவதற்குப் பதிலாக, பல நவீன வியாக்கியான அறிஞர்கள் வேதத்தின் பல அர்த்தங்கள் மொழியின் உள்ளார்ந்த தெளிவற்ற தன்மைகளிலிருந்து விளைகின்றன என்று நம்புகிறார்கள். மொழி மிகவும் தெளிவற்றது, ஆகையால் ஒருபோதும் துல்லியமான ஒரு அர்த்தம் இருக்க முடியாது என்று அவர்கள் வாதிடுகின்றனர். இதன் காரணமாக, ஒரு வேதாகமப் பகுதியின் அர்த்தத்தின் சில தெளிவற்ற வரம்புகள் அல்லது எல்லைகளைத் தீர்மானிப்பதே நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த காரியமாகும். ஆனால் இந்தக் கண்ணோட்டத்தில், வேதத்தின் இந்த பல அர்த்தங்களை சரிபார்க்க முடியாது, ஒரு நபர் இதன் அர்த்தம் இது தான் என்று முடிவு செய்யும்போது அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கும்.

வேதாகமத்தின் நேரடி அர்த்தத்தை அதன் பல அர்த்தங்களில் ஒன்றாக பல கிறிஸ்தவர்கள் நம்பியிருப்பதை இப்போது நாம் கண்டோம், நேரடி அர்த்தம்ை என்பது வேதாகமத்தின் ஒற்றை அர்த்தம் என்ற கருத்தைக் கருத்தில் கொள்வோம்.

## ஒற்றை அர்த்தம்

சுமார் 1225 முதல் 1274 வரை வாழ்ந்த புகழ்பெற்ற இறையியலாளர் தாமஸ் அக்வினாஸ், *குவாட்ரிகாவுக்கு* மிகவும் பொறுப்பான அணுகுமுறையை ஆதரித்தார். அவரது முன்னோடிகள் மற்றும் சமகாலத்தவர்களில் பலரைப் போலல்லாமல், வேதாகமத்தின் நேரடி அர்த்தம் அதன் மற்ற எல்லா அர்த்தங்களுக்கும் அடித்தளமாக உள்ளது என்று அவர் வலியுறுத்தினார். எடுத்துக்காட்டாக, அவரது *சுமா தியோலாஜிகா* என்கிற நூலில், பகுதி 1, கேள்வி 1, கட்டுரை 10 இல், ஒவ்வொரு முறையான ஆவிக்குரிய வியாக்கியானமும் ஒரு வேத பகுதியின் நேரடி அர்த்தத்தில் வேரூன்றியுள்ளது என்று வலியுறுத்தினார். விசுவாசத்திற்குத் தேவையான எதையும் வேதாகமத்தில் வேறு எங்கும் நேரடி அர்த்தத்தில் கற்பிக்காமல் ஆவிக்குரிய அர்த்தமாகத் தெரிவிக்கப்படவில்லை என்றும் அவர் கற்பித்தார். வேதவாக்கியங்களை வியாக்கியானம் செய்யும்போது அக்வினாஸ் எப்போதும் இந்தக்

கொள்கைகளைப் பின்பற்றினார் என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆயினும்கூட, வேதாகமத்தின் ஒரு பகுதியின் ஒவ்வொரு அர்த்தமும் அதன் உண்மையான அர்த்தத்துடன் பிணைக்கப்பட வேண்டும் என்று அவர் கொள்கையளவில் வலியுறுத்தினார்.

வேதத்தின் நேரடியான அர்த்தத்தில் ஆவிக்குரிய அர்த்தங்களை நங்கூரமிடுவதற்கான அக்வினாஸின் முயற்சிகள் நம்மில் பெரும்பாலானோருக்கு பொதுவானதாகத் தோன்றினாலும், அவரது பார்வை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வேத பகுதிகளின் நேரடி அர்த்தத்திலிருந்து துண்டிக்கப்பட்ட ஆவிக்குரிய வியாக்கியானங்கள் இடைக்கால திருச்சபையின் பல கோட்பாடுகளை ஆதரிக்கப் பயன்படுத்தப்பட்டன. மேலும் சபை அதிகாரிகள், வேதத்தின் நேரடி அர்த்தத்துடன் எந்த தொடர்பும் இல்லாத ஆவிக்குரிய அர்த்தங்களைப் பற்றி தேவன் வழங்கிய சிறப்பு நுண்ணறிவுகளைக் கொண்டிருந்ததாக வலியுறுத்தினர்.

ஆனால் பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது வேதாகமத்தின் வியாக்கியானத்தில் வியத்தகு மாற்றத்திற்கு களம் அமைத்தது. சுருக்கமாக, மறுமலர்ச்சி அறிஞர்கள் செவ்வியல் இலக்கிய, தத்துவ மற்றும் மத நூல்களை அவற்றின் மூல மொழிகளில் படிக்கத் தொடங்கினர். அவர்கள் அதைச் செய்தபோது, இந்த வேத பகுதிகளின் இலக்கிய, வரலாற்று அர்த்தத்தை முன்னிலைப்படுத்துவதன் மூலம் திருச்சபையின் அதிகாரத்திற்கு அப்பால் இந்த வேத பகுதிகளை வியாக்கியானம் செய்தனர். இந்த அணுகுமுறை வேதாகமத்திற்கும் பயன்படுத்தப்படுவதற்கு வெகுகாலம் ஆகவில்லை. இந்த வியாக்கியான உத்தி வேத பகுதிகளின் அசல் அர்த்தத்துடன் இலக்கிய அர்த்தத்தை சமப்படுத்தியது. மேலும் இது இந்த நேரடியான, அசல் அர்த்தத்தின் மையத்தையும் அதிகாரத்தையும் வலியுறுத்தியது.

> இடைக்கால திருச்சபையில், பெரும்பாலான விசுவாசிகள் வேதாகமத்தில் தேவனுடைய முழு நோக்கமும் நான்கு வகையான அணுகுமுறையின் மூலம் அறியப்பட்டது என்பதை உறுதிப்படுத்தினர்: இலக்கியத்தைப் பின்பற்றும் ஒழுக்கம், மறைபொருள் உணர்வு மற்றும் உருவகம் ஆகியவற்றைப் பின்பற்றுகிறது. எனவே, நம்மில் **பெரும்பா**லானோ**ரால்** ”புராட்டஸ்டன்ட்டுகள்” என்று அழைக்கப்படுகிற பதினாறாம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதிகள் கோட்பாட்டில் ஒரு பகுதியில் இதை எதிர்த்தார்கள். விசேஷமாக அதிலிருந்து வெளிவந்ததை எதிர்த்தார்கள், சில சமயங்களில், வேதத்தின் சிதைவு என்று அவர்கள் உணர்ந்த கற்பித்தலின் பாரம்பரியமாக அது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தது. அல்லது அது சபை அதிகாரத்திற்கு ஆதரவாக, வேதாகமத்தின் உண்மையான அல்லது அதிகாரப்பூர்வ நோக்கத்தை மறைத்தது.

– Dr. ஜேம்ஸ் டி. ஸ்மித் III

குவாட்ரிகா, அல்லது வேதாகமத்தின் நான்கு அம்ச உணர்வானது, கிறிஸ்தவ திருச்சபைக்குள் ஒரு நீண்ட மற்றும் பண்டைய வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது… எனவே, சீர்திருத்தத்தின் போது சீர்திருத்த பிதாக்கள் தங்கள் கத்தோலிக்க சகாக்கள் சிலரால் இது குறித்துத் தள்ளப்பட்டனர், ஏனென்றால் சீர்திருத்தவாதிகள் வேதாகமத்திற்கு ஒரே ஒரு அர்த்தம் மட்டுமே உள்ளது என்று வலியுறுத்தினர். ஆனால் இதற்குப் பதிலளிக்கும் விதமாக, வில்லியம் விட்டேக்கர் போன்றவர்கள், எடுத்துக்காட்டாக, வேதத்திற்கு நான்கு புலன்கள் உள்ளன என்பதான குவாட்ரிகாவை நாங்கள் நிராகரிக்கவில்லை; மாறாக வேதாகமத்திற்கு நான்கு அர்த்தங்கள் உள்ளன என்ற கருத்தை நாங்கள் நிராகரிக்கிறோம் என்று கூறினர். வரலாற்று, இலக்கிய, இலக்கணம் சார்ந்த ஒரே அர்த்தம் தான் உள்ளது. ஆனால் மற்ற மூன்றும் சேகரிப்புகள் அல்லது இன்று நாம் பயன்பாடுகளாக நினைக்கக்கூடியவைகளாகும். அவைகள் அந்த ஒரு அர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டவைகள் என்பது கருத்தாகும், ஆனால் அந்த ஒரு உணர்வு இன்று வேதத்தின் வாசகர்களாகிய நமக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பற்றி சிந்திக்க உதவும் சரியான வரிகளாகும். எனவே, அது குவாட்ரிகாவை முற்றிலுமாக நிராகரிப்பது அல்ல, ஆனால் அதை மறுசீரமைப்பதைப் பற்றியதாகும். விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மூன்று வரிகளின் பயன்பாட்டுடன் இப்போது ஒரு உணர்வு உள்ளது.

– Dr. புரூஸ் பாகஸ்

மறுமலர்ச்சியின் போது, புராட்டஸ்டன்ட்கள் அக்வினாஸால் முன்னிறுத்தப்பட்ட கருத்துக்களை தொடர்ந்து வளர்த்தனர். ஆனால் எல்லா ஆவிக்குரிய அர்த்தங்களும் வேதாகமத்தின் நேரடியான அர்த்தத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை என்று அவர்கள் வாதிடவில்லை. மாறாக, ஒரு வேத பகுதியின் ஆவிக்குரிய அம்சங்கள் அனைத்தும் ஆசிரியர் தனது அசல்

வாசகர்களுக்காக நோக்கமாகக் கொண்டவை, உண்மையில் அதன் நேரடி உணர்வின் அம்சங்கள் என்று அவர்கள் கூறினர். வேதாகமத்தின் நேரடி அர்த்தம், அல்லது அசல் அர்த்தம், ஒற்றையானதும் சிக்கலானதுமாயிருக்கிறது என்று அவர்கள் நம்பினர். மறுமலர்ச்சி புராட்டஸ்டன்ட்கள் ”நேரடியான” என்ற வார்த்தையின் கருத்தை விரிவுபடுத்தினர் என்று நாம் கூறலாம், இதனால் வேதத்தின் ”இலக்கியம்” வெளிப்படுத்த ஆசிரியர் விரும்பிய அனைத்தையும் உள்ளடக்கியது. இதன் விளைவாக, உல்ரிச் ஸ்விங்கிலி, மார்ட்டின் லூதர் மற்றும் ஜான் கால்வின் போன்ற முன்னணி நபர்கள் ஒவ்வொரு வேத பகுதியும் அர்த்தப்படுத்தும் அனைத்தையும் உள்ளடக்கியதாக நேரடி அல்லது அசல் அர்த்தத்தை நினைத்தனர். வரலாற்று, கோட்பாட்டு, தார்மீக மற்றும் சமூகவியல் அம்சங்களை உள்ளடக்கிய ஒரு சிக்கலான அர்த்தமாக அவர்கள் நேரடி அர்த்தத்தைக் கண்டனர்.

வேதாகமத்தின் நேரடி அர்த்தத்தைப் பற்றிய புரோட்டஸ்டன்ட் கருத்தாக்கத்தை வெட்டப்பட்ட இரத்தினக்கல்லுடன் ஒப்பிடுவதன் மூலம் விளக்குவது உதவியாக இருக்கும். வெட்டப்பட்ட ரத்தினக் கற்கள் பல ”பட்டைகள்” அல்லது ”முகங்களைக்” கொண்டுள்ளன, அதே போல் வேதாகமத்தின் நேரடி அர்த்தத்திற்கு பங்களிக்கும் பல சிறிய புலன்கள் உள்ளன. வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் அதன் ஆசிரியரால் வரலாற்று உண்மைகள், கோட்பாடுகள், தார்மீக கடமைகள், இரட்சிப்பு மற்றும் இறையியல் மற்றும் பலவற்றைப் பற்றி ஏதாவது ஒன்றைத் தொடர்புகொள்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

மேலும், ரத்தினக் கல்லின் ஒவ்வொரு அம்சமும் ஒரு தனித்துவமான மேற்பரப்பு ஆகும், இது முழுமையின் அழகுக்கு பங்களிக்கிறது, மேலும் எந்த ஒரு அம்சமும் முழு கல் என்று உரிமை கொண்டாட முடியாது. இதேபோல், வேதாகமப் பகுதிகள்நேரடி அர்த்தத்திற்கு பங்களிக்கும் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளன, மேலும் இந்த சிறிய அம்சங்கள் எதுவும் முழு நேரடி அர்த்தம் என்று கூற முடியாது.

எளிமையாகச் சொல்வதானால், வேதாகமத்தின் அர்த்தமானது பன்முகத்தன்மை கொண்டது. ஒவ்வொரு பகுதியின் அர்த்தமும் பல சிறிய பகுதிகள் அல்லது அம்சங்களைக் கொண்டுள்ளது, அவை அதன் நேரடி அர்த்தம் என்று நாம் அழைக்கும் ஒற்றையான மற்றும் ஒருங்கிணைந்த அர்த்தத்திற்கு பங்களிக்கின்றன.

> வேதம் ஒரு வளமான புத்தகமாகும். இது ஒரு ஆழமான புத்தகம். அது தேவனுடைய மனதிலிருந்து வருகிறது, தேவனுடைய மனம் மிகவும் பரந்தது, வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் பரந்தவை, அவை பல கோணங்களைக் கொண்டுள்ளன என்று நான் தைரியமாக கூறுவேன்...



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எனவே வியாக்கியானங்களை மதிப்பிடுவது இந்த கோணம் வேத பகுதியைப் படிக்க பொருத்தமான வழியா? என்று வெறுமனே உட்கார்ந்து உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளும் விஷயமாகும், … எனவே அந்த வகையில் பல்வேறு கோணங்களில் விஷயங்களைப் பார்க்கும் சூழலில் பன்முகத்தன்மைக்கான சாத்தியம் மற்றும் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் உங்களுடைய விருப்ப தேர்ந்தெடுத்தல்கள் மூலம் சிந்திக்க வேண்டும், பின்னர் அர்த்தம் இருக்கிறது மற்றும் சிக்கலானதாக இருக்கிறது என்பதற்கான சாத்தியக்கூறுகளை எதிர்பார்த்து இருக்க வேண்டும். இதன் விளைவாக, இது உண்மையில் உங்கள் வியாக்கியானத்தை வளப்படுத்துகிறது, ஏனெனில் ஒரு வேத பகுதியின் அர்த்தம் ஆரம்ப புரிதலை விட வித்தியாசமாக இருக்கலாம், இதன் விளைவாக வேத பகுதியை வேறொருவர் படிப்பதிலிருந்து நான் கற்றுக்கொள்ள முடியும்.
>
> – Dr. டாரல் எல்.பாக்

குறிப்பிடத்தக்க அளவுடைய வேதாகமத்தின் ஒவ்வொரு வேத பகுதியும் இறையியல் மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் தாக்கங்களைக் கொண்டுள்ளது. எனவே, வேதாகம வசனங்களுக்கு பல அர்த்தங்கள் இருப்பதாக திருச்சபையின் வரலாறு முழுவதும் பலர் ஏன் நினைத்தார்கள் என்பதைப் புரிந்துகொள்வது எளிது. ஆனால் வேதாகமத்தின் செழுமைக்கு மிகவும் பொறுப்பான அணுகுமுறை என்னவென்றால், ஒரு வேத பத்தியைப் பற்றி நாம் சொல்லும் அனைத்தும் பண்டைய உலகின் வரலாற்று பின்னணியில் அமைக்கப்பட்ட அதன் இலக்கணத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதாகும். நாம் வேதத்தை இந்த வழியில் அணுகினால், தேவனும் அவரது ஏவப்பட்ட மனித எழுத்தாளர்களும் வேதாகமத்தின் அசல் வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்பிய சிக்கலான அர்த்தத்தைக் கண்டுபிடிக்க நாம் சிறப்பாக தயாராக இருப்போம்.

வேதாகமத்தில் அர்த்தத்தின் சிக்கலான தன்மையைப் பற்றிய நமது விவாதத்தில் இதுவரை, புராட்டஸ்டன்ட்கள் வேதத்தின் நேரடி அர்த்தத்தின் முக்கியத்துவத்தையும் நோக்கத்தையும் ஏன் வலுவாக உறுதிப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்தோம். எனவே, இந்த கட்டத்தில், வேத வசனங்களின் முழு மதிப்பு என்று நாம் எதைக் குறிப்பிடுகிறோமோ அதில் நம் கவனத்தைத் திருப்ப நாம் தயாராக இருக்கிறோம்.

# முழு மதிப்பு

